பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 03 2024 **SATURDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலை இம்மாதம் 28ஆம் தேதிவரை காவலில் வைக்க தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2. ஒடிசாவில் மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் பிஜு ஜனதா தளமும், பிஜேபியும் தனித்து போட்டியிடுகின்றன..

3. தமிழகத்திற்கு 39 தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் வரும் 26ஆம் தேதி வருகை தரவுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

4. ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இசை நிகழ்ச்சி ஒன்றில் அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 40 பேர் உயிரிழந்தனர்.

5. புனேயில் நடைபெற்று வரும் தேசிய சீனியர் மகளிர் ஹாக்கி சாம்பியன் இறுதிப் போட்டிக்கு ஹரியானா முன்னேறியுள்ளது.

>>>><<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலை இம்மாதம் 28ஆம் தேதிவரை காவலில் வைக்க தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை, 10 நாட்கள் தங்களது காவலில் எடுத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்று அமலாக்கத்துறை சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், ஆறு நாட்கள் மட்டுமே விசாரணை நடத்த சிபிஐ சிறப்பு நீதிபதி காவேரி பவேஜா உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக இதே வழக்கில் கைது செய்யப்பட்ட தெலங்கானா முன்னாள் முதலமைச்சர் திரு. சந்திரசேகர ராவ்-ன் மகள் திருமதி. கவிதாவுக்கு ஜாமின் வழங்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

விசாரணை நீதிமன்றத்தை அணுகுமாறு கூறியது.

>>>><<<<

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடத்த தமிழக தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

மாநிலத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் கடந்த 16ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ள நிலையில், நேற்றுவரை 11 கோடியே 98 லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், தேர்தல் ஆணையத்தின் சார்பில் வேட்பாளர்களை அறிந்து கொள்ள **KYC** என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதில் வேட்பாளர் பெயர், அவரைப் பற்றிய தகவல்கள், குற்றவழக்குகள், வழக்குகளின் தற்போதைய நிலை மற்றும் சொத்து விவரங்கள் உள்ளிட்டவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய திரு. சத்யபிரத சாஹூ, தமிழகத்திற்கு 39 தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் வரும் 26ஆம் தேதி வருகை தரவுள்ளதாக கூறினார்.

இரண்டு மக்களவை தொகுதிக்கு இருவர் வீதம், 20 காவல் பார்வையாளர்கள் வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் நாம் தமிழர் கட்சிக்கு மைக் சின்னமும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு சைக்கிள் சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மதிமுக மற்றும் புதிய தமிழகம் கட்சிக்கு தனிச் சின்னம் கேட்டு அனுப்பப்பட்ட மனுக்களுக்கு தேர்தல் ஆணையத்திடமிருந்து இதுவரை பதில் வரவில்லை என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய இம்மாதம் 27ஆம் தேதி கடைசி நாள் என்பதால் வேட்புமனுக்கள் பரிசீலனையின் போது, சின்னம் இருக்க வேண்டும் என்றும் அதனை தேர்தல் ஆணையம் தான் முடிவு செய்யும் என்றும் திரு. சத்யபிரத சாஹூ குறிப்பிட்டார்.

>>>><<<<

கடந்த மக்களவைத் தேர்தலில் பிஜேபி நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை அறிவித்து இந்த தேர்தலை பிஜேபி எதிர்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

திமுகவின் தேர்தல் அறிக்கை, முந்தைய தேர்தல்களின்போது தயாரிக்கப்பட்ட அறிக்கையாகவே உள்ளது என்று திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

>>>><<<<

ஒடிசாவில் மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் பிஜு ஜனதா தளமும், பிஜேபியும் தனித்து போட்டியிடுகின்றன.

இருகட்சிகளும் கூட்டணி அமைத்து போட்டியிட திட்டமிட்டு பேச்சுவார்த்தை நடத்தி வந்த நிலையில் உடன்பாடு எட்டப்படவில்லை.

எனவே ஒடிசா மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. மன்மோகன் சமல் கூறினார்.

21 மக்களவைத் தொகுதிகள், 147 சட்டப்பேரவை தொகுதிகளில் பிஜேபி தனித்து போட்டியிடுவதாகவும் நான்கரை கோடி ஒடிசா மக்களின் நம்பிக்கை மற்றும் விருப்பங்களை பிஜேபி நிறைவேற்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஆளும் பிஜு ஜனதா தளம் இந்தமுறையும் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

1998ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றிருந்த பிஜு ஜனதா தளம் சில பிரச்சினைகளால் கூட்டணியிலிருந்து வெளியேறினாலும், மத்திய பிஜேபி அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு அளித்து வந்தது.

>>>><<<<

அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை போன்ற அமைப்புகளை மத்திய அரசு தவறாக பயன்படுத்துவதாக திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், மக்களுக்கான சட்டங்களை மாநில அரசு நிறைவேற்றினால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் நிறுத்தி வைப்பதாக கூறினார்.

இதற்காக ஒவ்வொரு முறையும் உச்சநீதிமன்றத்திற்கு செல்ல வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மத்திய அரசு போதுமான நிதியை ஒதுக்கவில்லை என்றும், மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு வரிகள் மூலம், ஏராளமான வருவாய் கிடைத்த போதும், மாநில அரசுக்கான வருவாய் பங்கீடு குறைவாக இருப்பதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, தேர்தல் ஆணையம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

தேர்தலில் முதல்முறையாக வாக்களிக்கவுள்ளதை மிகுந்த ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளதாக காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 25 செகண்ட்ஸ்)

>>>><<<<

அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி முன்னாள் அமைச்சர் திரு செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பினை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் வரும் 28-ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

நீதிபதி திருமதி. அல்லி நேற்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இதற்கிடையே, திரு செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் முடிவடைவதையொட்டி, புழல் சிறையிலிருந்து காணொலி வாயிலாக அவர் நீதிபதி முன் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து, திரு செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை வரும் 28-ஆம் தேதிவரை நீட்டித்து, நீதிபதி உத்தரவிட்டார்.

>>>><<<<

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இசை நிகழ்ச்சி ஒன்றில் அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 40 பேர் உயிரிழந்தனர்.

நூற்றுக்குமேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஐயாயிரம் கூடியிருந்த இசை நிகழ்ச்சியில் திடீரென நுழைந்த ஆயுதம் தாங்கிய மர்ம நபர்கள் கண்மூடித்தனமான துப்பாக்கியால் சுட்டனர்.

வெடிகுண்டுகளையும் வீசியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இநத் கொடூர தாக்குதல் காரணமாக அரங்கமே போர்க்களம்போல் காட்சியளித்தது.

இந்நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் குறித்து கவலை தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திரமோடி அங்குள்ள நிலைமை குறித்து அதிபர் விளாடிமிர்புட்டினுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்

>>>><<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உலக மக்களின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானம் ஐ.நா பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சக்திவாய்ந்த புதிய தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவின் சேவைகள் சர்வதேச அளவில் அனைத்து நாடுகளுக்கும் ஆதரவு அளிப்பதை உறுதி செய்வதுடன், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து பாதுகாப்பான நம்பிக்கைக்குரிய வகையில் பயன்படுத்த இந்த தீர்மானம் வகை செய்கிறது.

அமெரிக்கா கொண்டுவந்த இந்த தீர்மானத்திற்கு 123 நாடுகள் ஒருமித்த கருத்துடன் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக, வாக்கெடுப்பின்றி இந்த தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஐ நா-வில் இடம்பெற்றுள்ள 193 உறுப்பு நாடுகளும், இந்த தீர்மானத்தை ஆதரித்துள்ளதாக ஐ நா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

புனேயில் நடைபெற்று வரும் தேசிய சீனியர் மகளிர் ஹாக்கி சாம்பியன் இறுதிப் போட்டிக்கு ஹரியானா முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், இந்த அணி 4-0 என்ற கோல்கணக்கில் ஜார்கண்ட் அணியை வென்றது.

>>>><<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் சென்னை அணி – பெங்களூரு அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 173 ரன் எடுத்தது.

174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய சென்னை அணி, 18 புள்ளி 4 ஓவரில் நான்கு விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 176 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

பஞ்சாபில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இரவு மணி 7.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

>>>>END<<<<